# வரவு செலவுத் திட்ட வாக்குறுதிகள்: பாராளுமன்றத்திற்கு அப்பால்

2021 நடு ஆண்டு மதிப்பீடு

மார்ச் 2022

© Verité Research

# உள்ளடக்க அட்டவணை


வரவு செலவுத்திட்ட வாக்குறுதிகள்: பாராளுமன்றத்திற்கு அப்பால்......3

இது எப்படி செயல்படுகிறது?......4

1. வெளிப்படைத்தன்மை......6

1.1. வெளிப்படைத்தன்மை கண்காணிப்பான்......6

1.2. அரச நிறுவனங்களுக்கான வெளிப்படைத்தன்மை தரவரிசை......7

2. முன்னேற்றம்......8

3. முன்னேற்றம், திறந்த நிலை மற்றும் தரவரிசை மதிப்பீடுகளின் விவரங்கள்......12

# வரவு செலவுத்திட்ட வாக்குறுதிகள்: பாராளுமன்றத்திற்கு அப்பால்

**“வரவு செலவுத்திட்ட வாக்குறுதிகள்: பாராளுமன்றத்திற்கு அப்பால்”** என்பது publicfinance.lk தளத்தின் கீழுள்ள ஒரு டாஷ்போர்டு ஆகும். இது வருடாந்த வரவு செலவுத்திட்ட உரையில் வழங்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் அரசாங்கத்தின் செயல்திறனைக் கண்காணிக்கிறது.

2017 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த டாஷ்போர்டு, அரசாங்கம் வருடாந்த வரவு செலவுத்திட்ட உரையில் முன்வைக்கும் வாக்குறுதிகள் குறித்த இரண்டு அடிப்படைக் கேள்விகளுக்குப் பதிலளிக்க முனைகிறது:

- அரசாங்கம் சொல்வதைச் செய்கிறதா?
- அரசாங்கம் செய்வதைச் சொல்கிறதா?

இந்தக் கேள்விகளுக்கான பதில்களைப் பகிரங்கமாக வழங்குவதன் மூலம் டாஷ்போர்டு கீழுள்ளவற்றை அடைய முயல்கிறது.

(i) அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்ட வாக்குறுதிகளின் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துதல்

(ii) இவ்வாக்குறுதிகளுக்கு அரசாங்கத்தைப் பொறுப்பாக்குதல்

# இது எப்படி செயல்படுகிறது?

வரவு செலவுத் திட்ட வாக்குறுதிகள்: பாராளுமன்றத்திற்கு அப்பால் என்ற டாஷ்போர்டு ஆனது வரவு செலவுத் திட்ட உரையில் வாசிக்கப்படும் செலவின முன்மொழிவுகள் அல்லது 'வாக்குறுதிகளை கண்காணிக்கிறது. 2019 ஆம் ஆண்டில், இத்தளம், செலவின ஒதுக்கீடு இல்லாத சட்டம் மற்றும் ஒழுங்குமுறை மாற்றங்கள் போன்ற ஒழுங்குமுறை முன்மொழிவுகளை கண்காணிக்கத் தொடங்கியது. 2021 ஆம் ஆண்டின் மத்திய ஆண்டு மதிப்பீடானது 31 செலவின முன்மொழிவுகளைக் கண்காணித்தது. ஆண்டிறுதி மதிப்பீட்டில் 31 செலவின முன்மொழிவுகளுக்கு மேலதிகமாக 12 ஒழுங்குமுறை முன்மொழிவுகள் பரிசீலிக்கப்படும்.பின்வருவனவற்றை இந்தத் தளம் கண்காணித்தது:

| **ஆண்டு** | **தெரிவுசெய்யப்பட்ட செலவின முன்மொழிவுகள்** | | | **தெரிவுசெய்யப்பட்ட கொள்கை முன்மொழிவுகள்** |
|---|---|---|---|---|
| | **தெரிவுசெய்வதற்கான அளவுகோல்*** | **முன்மொழிவுகளின் எண்ணிக்கை** | **திட்டங்களின் மொத்த மதிப்பு** | **முன்மொழிவுகளின் எண்ணிக்கை** |
| 2017 | ரூ.1 பில்லியனுக்கு மேற்பட்டது | 37 | ரூ. 116,910 மில்லியன் | 0 |
| 2018 | ரூ.1 பில்லியனுக்கு மேற்பட்டது | 38 | ரூ. 149,350 | 0 |
| 2019 | ரூ.500 மில்லியனுக்கு மேற்பட்டது | 37 | ரூ. 100,875 | 22 |
| 2020[1] | - | 24 | - | 10 |

[1] In 2020 due to the absence of a budget speech the platform tracked 24 cabinet decisions—a combination of expenditure and regulatory policy decisions—made from January to June 2020. The decisions tracked were chosen based on the ability to identify an implementing agency and those that contained trackable outcomes. In 2019, the progress of budget proposals were hindered as a result of the Easter Sunday Attacks. Therefore, 8 proposals from the 2019 Budget Speech were chosen to assess their progress in 2020

| | | | | |
|---|---|---|---|---|
| 2021 | ரூ.1 பில்லியனுக்கு மேற்பட்டது | 31 | ரூ.284,000 | 12 |

இந்தத் தளம் வருடத்துக்கு இரண் டு தடவைகள் இற்றைப்படுத்தப்படும். முன்மொழிவுகள் இரண்டு குறிகாட்டிகளைப் பயன்படுத்தி மதிப்பிடப்படுகின்றன: **வெளிப்படைத்தன்மை** மற்றும் **முன்னேற்றம்**. நடு ஆண்டு மதிப்பீடானது, குறித்த ஆண்டின் முதல் ஆறு மாதங்களுக்கான செலவினத் திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் வெளிப்படைத்தன்மையை மதிப்பிடுகிறது. ஆண்டிறுதி மதிப்பீடானது செலவினம் மற்றும் ஒழுங்குமுறை முன்மொழிவுகள் ஆகிய இரண்டினதும் முன்னேற்றம் மற்றும் வெளிப்படைத்தன்மையை மதிப்பிடுகிறது. ஆண்டு இறுதி மதிப்பீடுகளுக்கான வெளிப்படைத்தன்மை குறிகாட்டி, செலவின மற்றும் ஒழுங்குமுறை முன்மொழிவுகள் ஆகிய இரண்டிற்கும் வெளிப்படைத்தன்மை மதிப்பீடுகளை ஒருங்கிணைக்கிறது.

2021 ஆம் ஆண்டின் நடு ஆண்டுக்குரிய மதிப்பீடுகளுக்கு, அனைத்து முன்மொழிவுகளுக்குமான RTI விண்ணப்பங்கள் 15 நவம்பர் , 2021 அன்று தாக்கல் செய்யப்பட்டன. 17 நவம்பர் முதல் 15 ஜனவரி 2022 வரை பெறப்பட்ட தகவல்கள் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டன. தகவல் பெறுவதற்கான காலக்கெடு 2016 இன் RTI சட்டம் 12 ஆம் இலக்கத்தை அடிப்படையாகக் கொண்டது. இந்தக் காலக்கெடுவிற்கு அப்பால் பெறப்பட்ட எந்தத் தகவலும் மதிப்பீடுகளுக்கு உட்படுத்தப்படவில்லை.

*2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் தெரிவு செய்வதற்கான அளவுகோல், திட்டத்திற்காக முன்மொழியப்பட்ட செலவின ஒதுக்கீட்டை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டிருந்தது. 2019 ஆம் ஆண்டில் வரவு செலவுத்திட்ட உரையின் அறிக்கையிடும் வடிவம் மாறியதால் தெரிவுசெய்வதற்கான அளவுகோல் முன்மொழியப்பட்ட செலவின ஒதுக்கீடு மற்றும் ஏற்கனவே ஒதுக்கப்பட்ட தொகையை அடிப்படையாகக் கொண்டிருந்தது.

**2019 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட உரை தாமதமானதுடன், 2019 மார்ச் மாதத்திலேயே பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. எனவே 2019 ஆம் ஆண்டில் ஆண்டிறுதி மதிப்பீடு மாத்திரமே முன்னெடுக்கப்பட்டது. 2020 ஆம் ஆண்டில் வரவு செலவுத்திட்ட உரை இல்லாத காரணத்தால் அந்த ஆண்டிலும் ஆண்டிறுதி மதிப்பீடு மட்டுமே முன்னெடுக்கப்பட்டது.

# 1. வெளிப்படைத்தன்மை

## 1.1. வெளிப்படைத்தன்மை கண்காணிப்பான்

இச்சுட்டியானது ஒவ்வொரு அமைச்சரவைத் தீர்மானம்/வாக்குறுதி தொடர்பாகவும் அரசாங்கம் தான் **செய்வது பற்றி எந்தளவு வெளிப்படுத்துகிறது** என்பதைக் கண்காணிக்கிறது. இந்தக் கண்காணிப்பான் ஒவ்வொரு அமைச்சரவைத் தீர்மானங்கள்/வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பான தகவல்களை வழங்குவதில் காணப்படும் அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மையின் நிலையை அளவிடுகிறது. அரசாங்க இணையதளங்கள் மற்றும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட கோரிக்கைகளில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களை கண்காணிப்பான் பயன்படுத்துகின்றது. 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் அரசாங்க நிறுவனங்களுக்கு விஜயம் செய்தும், முறைசாரா கோரிக்கைகளின் மூலமாகவும் தகவல்கள் திரட்டப்பட்டன. எனினும் இந்தத் தகவல் சேகரிக்கும் முறை நிறுத்தப்பட்டுள்ளது.

செலவின முன்மொழிவுகளில் முதல் ஆறு மாத முன்னேற்றம் குறித்த தகவல்களை வெளியிடுவதில் அரசாங்கம் எந்த அளவு வெளிப்படைத்தன்மையை கொண்டது என்பதை நடு ஆண்டு மதிப்பீடு அளவிடுகிறது. ஆண்டு இறுதி மதிப்பீடானது, முழு ஆண்டுக்குமான செலவின மற்றும் ஒழுங்குமுறை முன்மொழிவுகள் ஆகிய இரண்டினதும் முன்னேற்றம் குறித்த தகவல்களை வெளியிடுவதில் அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மையை அளவிடுகிறது.

வெளிப்படைத்தன்மை வகைகள் செலவின மற்றும் கொள்கை அமைச்சரவைத் தீர்மானங்கள்/முன்மொழிவுகளுக்குப் பொதுவானவை.

மதிப்பீட்டின்போது கிடைக்கும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு வெளிப்படைத்தன்மை பின்வருமாறு வகைப்படுத்தப்படுகிறது:

| | | |
|---|---|---|
| ● | வெளிப்படை யற்றது | அமைச்சரவைத் தீர்மானங்கள்/வாக்குறுதியின் முன்னேற்றதைப் பற்றித் தீர்மானிப்பதற்குத் தேவையான எவ்வித தகவலும் இல்லை |

| | | |
|---|---|---|
| ◐ | **மட்டுப்படுத்தப்பட்டது** | மதிப்பீட்டின் முழுக்காலத்திற்கும் அமைச்சரவைத் தீர்மானங்கள்/வாக்குறுதியின் முன்னேற்றத்தைத் தீர்மானிப்பதற்குப் போதுமான தகவல்கள் கிடைக்கவில்லை. |
| ◐ | **ஒத்துழைக்கப்படாதது** | அமைச்சரவைத் தீர்மானங்கள்/வாக்குறுதியின் முன்னேற்றம் தொடர்பான தகவல்களைப் பெறுவதற்கும் மதிப்பிடுவதற்கும் கடும் முயற்சி தேவைப்பட்டது |
| ◑ | **ஒத்துழைக்கப்பட்டது** | அமைச்சரவைத் தீர்மானங்கள்/வாக்குறுதியின் முன்னேற்றம் தொடர்பான வேண்டுகோள்களுக்கு தகவல்கள் காலதாமதமின்றி வழங்கப்பட்டன |
| ○ | **வெளிப்படையானது** | அமைச்சரவைத் தீர்மானங்கள்/வாக்குறுதியின் முன்னேற்றம் தொடர்பான முழுத் தகவல்களும் கேட்பதற்கு முன்னரே வெளிப்படுத்தப்பட்டிருந்தன |

## 1.2. அரச நிறுவனங்களுக்கான வெளிப்படைத்தன்மை தரவரிசை

இது அரச நிறுவனங்கள் தாங்கள் பொறுப்பேற்றுள்ள அமைச்சரவைத் தீர்மானங்கள்/வாக்குறுதிகள் தொடர்பான தகவல்களை வெளியிடுவதிலுள்ள வெளிப்படைத்தன்மையை ஒப்பிட்டு தரவரிசையை வழங்குகிறது. ஒவ்வொரு நிறுவனமும் 0 முதல் 4 வரையில் புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும். 4 என்பது உயர்ந்தபட்ச வெளிப்படைத்தன்மையைக் குறிக்கிறது. அதன் பின்பு அதிக புள்ளிகளைப் பெற்ற அரச நிறுவனங்கள் முதல் குறைந்த புள்ளிகளைப் பெற்ற நிறுவனங்கள் வரை தரவரிசைப்படுத்தப்படும். இது குறித்த ஆண்டில் அவற்றின் செயல்திறனை வெளிப்படுத்துகிறது.


நிறுவனத்தின் மேற்பார்வையின் கீழ் வரும் ஒவ்வொரு அமைச்சரவைத் தீர்மானத்துக்குமான மதிப்பெண்களின் சராசரியைக் கணக்கிடுவதன் மூலம் அரச நிறுவனத்தின் மொத்தப் புள்ளிகள் கணக்கிடப்படுகின்றன. ஒவ்வொரு அமைச்சரவைத் தீர்மானமும் 0 முதல் 100 வரை மதிப்பெண்களைக் கொண்டிருக்கும். ஒவ்வொரு தனிப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்திற்குமான மதிப்பெண்கள் (1) அமைச்சரவைத் தீர்மானத்தின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதில் தகவல்களின் பயன்பாட்டுத்தன்மை (2) தகவல்களைப் பெறுவதிலுள்ள இலகுத்தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது.

2020 ஆம் ஆண்டில் வரவு செலவுத்திட்ட உரை இல்லாத காரணத்தால் ஒதுக்கீடுகள் தொடர்பில் தகவல்களைப் பெற முடியவில்லை என்பதால் அந்த

ஆண்டு நிறுவனங்களின் தரவரிசை எளிதான சராசரி முறையைப் பயன்படுத்திக் கணக்கிடப்பட்டது.

**தகவலின் பயன்பாடு:** கிடைத்த தகவல்கள் முழுமையாக பயன்படுத்தக்கூடியவை, பகுதியளவில் பயன்படுத்தக்கூடியவை அல்லது பயன்படுத்த முடியாதவை என்ற அடிப்படையில் ஒவ்வொரு அமைச்சரவைத் தீர்மானத்துக்கும் 0, 1, 2, 3 அல்லது 4 என்ற ஆரம்ப மதிப்பெண்கள் வழங்கப்படும்.

**தகவல்களைப் பெறுவதிலுள்ள இலகுத்தன்மை:** தகவல்களைப் பெற்றுக்கொள்வதில் காணப்படும் இலகுத்தன்மைக்கு ஏற்ப பயன்பாட்டிற்காக வழங்கப்பட்ட ஆரம்ப புள்ளிகள் மாற்றப்படுகின்றன. தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட கோரிக்கைகளுக்கு வழங்கப்படும் அதாவது கேட்கப்பட்டதன் பின்னர் வழங்கப்படும் தகவல்களுடன் ஒப்பிடுகையில், தகவல்களைக் கோருவதற்கு முன்னரே அவற்றை ஒன்லைன் மூலம் வழங்கும் தகவல்களுக்கு அதிக புள்ளிகள் வழங்கப்படும்.




## 2. முன்னேற்றம்

### 2.1 செலவின முன்மொழிவுகளுக்கான முன்னேற்றக் கண்காணிப்பான்

இந்தச் சுட்டியானது **அரசாங்கம் தாம் செய்வதாகச் சொல்வதை எந்தளவுக்குச் செய்கிறது** என்பதைக் கண்காணிக்கிறது. அமைச்சரவைத்

தீர்மானங்கள்/வாக்குறுதிகளுக்குப் பொறுப்பான நிறுவனங்களால் உருவாக்கப்பட்ட காலக்கெடு மற்றும் மைல் கற்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றை நடைமுறைப்படுத்துவதில் அரசாங்கத்தின் முன்னேற்ற நிலையை மதிப்பிடுகிறது.

வருட நடுப்பகுதி மதிப்பீட்டின் முன்னேற்றம் பின்வருமாறு வகைப்படுத்தப்படுகிறது:

| | |
|---|---|
| தகவல் வெளிப்படுத்தப்படவில்லை | வாக்குறுதி சம்பந்தமாக எவ்வித தகவல்களும் இன்மை, அல்லது காணப்படும் தகவலினால் எவ்வித உபயோகமும் இன்மை. |
| கைவிடப்பட்டுள்ளது | வாக்குறுதி கைவிடப்பட்டுள்ளது அல்லது பிற்போடப்பட்டுள்ளது. அத்துடன் அதன் அமுலாக்கம் கண்காணிக்கப்படும் காலஇடைவெளியில் திட்டமிடப்படாது ஒத்திவைக்கப்பட்டுள்ளது. |
| புறக்கணிப்பட்டுள்ளது | வாக்குறுதி அமுல்படுத்தப்பட திட்டமிடப்பட்டுள்ளது, ஆனால் திட்டமிட்டபடி ஆரம்பிக்கப்படவில்லை |
| பின்தங்கியுள்ளது | வாக்குறுதி அமுல்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றது, ஆனால் திட்டமிடப்பட்ட காலஅட்டவணையுடன் ஒப்பிடும் போது பின்தங்கியுள்ளது. |
| முன்னேறியுள்ளது | வாக்குறுதி நிறைவேற்றப்பட்டுக்கொண்டிருக்கின்றதுடன் குறித்த இலக்கை குறிப்பிடப்பட்ட நேரத்தினுள் அல்லது அதற்கு முன்னர் அடைவதற்கான நிலையில் காணப்படுகின்றது.[2] |

[2] ஒரு குறிப்பிட்ட வாக்குறுதி ஜூன் 30 2019 அன்றைக்கு இலக்கிடப்பட்ட அடைவின் 90% இனை அடைந்திருக்கும் பட்சத்தில் அவ்வாக்குறுதி முன்னேற்றகரமானது என வகைப்படுத்தப்படுகின்றது

ஆண்டிறுதி மதிப்பீட்டின் முன்னேற்றம் பின்வருமாறு வகைப்படுத்தப்படுகிறது:

| | |
|---|---|
| தகவல் வெளிப்படுத்தப்படவில்லை | அமைச்சரவைத் தீர்மானம்/வாக்குறுதியின் நிலையைத் தீர்மானிக்கத் தகவல் கிடைக்கவில்லை அல்லது கிடைத்த தகவல் போதுமானதாகவோ, பயனுள்ளதாகவோ இல்லை |
| கைவிடப்பட்டுள்ளது | அமைச்சரவைத் தீர்மானம்/வாக்குறுதியில் எவ்வித முன்னேற்றமும் இல்லை அல்லது அமைச்சரவைத் தீர்மானம்/வாக்குறுதி செயல் திட்டத்திலிருந்து நீக்கப்பட்டுள்ளது |
| முன்னேற்றமற்றது | அமைச்சரவைத் தீர்மானம்/வாக்குறுதியின் முன்னேற்றம் இலக்கில் 33% க்கும் குறைவாக எட்டப்பட்டுள்ளது |
| பகுதியளவு நிறைவேறியது | அமைச்சரவைத் தீர்மானம்/வாக்குறுதியின் முன்னேற்றம் இலக்கில் 33% - 66% க்கும் இடையில் எட்டப்பட்டுள்ளது |
| கணிசமான அளவு நிறைவேறியது | அமைச்சரவைத் தீர்மானம்/வாக்குறுதியின் முன்னேற்றம் இலக்கில் 66% - 80% க்கும் இடையில் எட்டப்பட்டுள்ளது |
| முற்றாக நிறைவேறியது | அமைச்சரவைத் தீர்மானம்/வாக்குறுதியின் முன்னேற்றம் இலக்கில் 80%க்கும் அதிகமாக உள்ளது |

## 2.2 ஒழுங்குமுறை முன்மொழிவுகளுக்கான முன்னேற்றக் கண்காணிப்பான்

2019 ஆம் ஆண்டில் இந்தத் தளம் தனது நோக்கத்தை விரிவுபடுத்தி, வரவு செலவுத்திட்ட உரையில் அரசாங்கம் முன்வைக்கும் கொள்கை உறுதிப்பாடுகளின் முன்னேற்றத்தைக் கண்காணிப்பதையும் இணைத்துக்கொண்டது. இந்த அமைச்சரவைத் தீர்மானங்களுக்கு செலவின ஒதுக்கீடுகள் கிடையாது.

"நிறைவேற்றப்பட்டன" அல்லது "பகுதியளவில் நிறைவேற்றப்பட்டன" எனக் கருதுவதற்கு சட்ட உருவாக்கம் அல்லது ஒழுங்குமுறை அறிவித்தல்கள் (வர்த்தமானி) தேவைப்படுவதன் அடிப்படையில் இந்த அமைச்சரவைத் தீர்மானங்கள்/முன்மொழிவுகள் தெரிவுசெய்யப்படுகின்றன. வர்த்தமானி அறிவிப்புகள், அரசாங்க சுற்றறிக்கைகள், அமைச்சரவைத் தீர்மானங்கள் குறித்த அரசாங்க தகவல் திணைக்களத்தின் அறிக்கைகள், தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட கோரிக்கைகள் போன்ற பகிரங்கமாகப் பொதுவெளியில் கிடைக்கும் தகவல்கள் மூலம் இந்தத் தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன.

அமைச்சரவைத் தீர்மானங்கள்/முன்மொழிவுகளை செயல்படுத்துவதில் அரசாங்கத்தின் முன்னேற்றத்தை இது கண்காணிக்கிறது.

| | | |
|---|---|---|
| ? | **வெளிப்படுத்தப்படவில்லை** | அமைச்சரவைத் தீர்மானம்/முன்மொழிவின் நிலையைத் தீர்மானிக்கத் தகவல்கள் கிடைக்கவில்லை அல்லது கிடைத்த தகவல் போதுமானதாகவோ, பயனுள்ளதாகவோ இல்லை |
| ✕ | **நிறைவேற்றப்படவில்லை** | அமைச்சரவைத் தீர்மானம்/முன்மொழிவின் எந்தவொரு பகுதிக்கும், தேவைப்படுகின்ற சட்டம் அல்லது ஒழுங்குமுறை அறிவித்தல் (வர்த்தமானி) வெளியிடப்படவில்லை. இதை சம்பந்தப்பட்ட அமைச்சு/அரச நிறுவனம் எழுத்து மூலம் உறுதிப்படுத்தியுள்ளது. |
| ◐ | **பகுதியளவில் நிறைவேற்றப்பட்டுள்ளது** | அமைச்சரவைத் தீர்மானம்/முன்மொழிவின் முழுமைக்கும் அன்றி ஒரு சில பகுதிகளுக்கு மட்டும், தேவைப்படுகின்ற சட்டம் அல்லது ஒழுங்குமுறை அறிவித்தல் (வர்த்தமானி) வெளியிடப்பட்டுள்ளது. |
| ✓ | **நிறைவேற்றப்பட்டுள்ளது** | அமைச்சரவைத் தீர்மானம்/முன்மொழிவு முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளது. அமைச்சரவைத் தீர்மானம்/முன்மொழிவின் முழுமைக்கும் தேவைப்படும் சட்டம் அல்லது ஒழுங்குமுறை அறிவித்தல் (வர்த்தமானி) வெளியிடப்பட்டுள்ளதுடன் மேலதிக எந்த நடவடிக்கையும் தேவையில்லை. |

## 3. முன்னேற்றம், திறந்த நிலை மற்றும் தரவரிசை மதிப்பீடுகளின் விவரங்கள்.

| வரவு செலவுத் திட்ட வாக்குறுதி | வெளிப்படைத்தன்மை கண்காணிப்பான் | முன்னேற்றக் கண்காணிப்பான் | ஏஜென்சி |
|---|---|---|---|
| சட்டத்துறை உட்கட்டமைப்பு அபிவிருத்தி | ஒத்துழைக்கப்பட்டது | பின்தங்கியுள்ளது | நீதியமைச்சு |
| | நடைமுறைப்படுத்தும் அமைப்பாக நீதியமைச்சு உள்ளதை NBD (தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களம்) அடையாளம் கண்டது. நீதியமைச்சிடம் தாக்கல் செய்யப்பட்ட தகவல் அறியும் உரிமைக் கோரிக்கைக்குப் பதிலாக, செப்டெம்பர் 30, 2021 வரையான சட்டப் பிரிவின் முன்னேற்ற அறிக்கை வழங்கப்பட்டது. வரவு செலவுத்திட்ட வாக்குறுதிகளின் தெளிவான விபரங்களை முன்னேற்ற அறிக்கை வழங்கவில்லை. அத்துடன் நீதிமன்றங்களின் உட்கட்டமைப்புகளை மட்டும் கவனத்தில் கொள்வதால் | ஜனவரி 1 முதல் செப்டெம்பர் 30 2021 வரையான சட்டப் பிரிவின் முன்னேற்ற அறிக்கை' எனத் தலைப்பிடப்பட்ட ஆவணத்தில், பொறியியல் அலகு எனத் தலைப்பிடப்பட்ட பிரிவு வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளின் கீழான திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பான சுருக்கத்தைத் தருகிறது. திருத்தப்பட்ட ஒதுக்கீடு ரூ.2,794 மில்லியனில் செப்டெம்பர் இறுதியில் ரூ.480 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. இதன் | |

| வரவு செலவுத் திட்ட வாக்குறுதி | வெளிப்படைத்தன்மை கண்காணிப்பான் | முன்னேற்றக் கண்காணிப்பான் | ஏஜென்சி |
|---|---|---|---|
| | வாக்குறுதிகளின் பிற அம்சங்கள் தொடர்பிலான முன்னேற்றத்தை மதிப்பிடுவது சிரமமாக உள்ளது. இந்த முன்மொழிவு தொடர்பான மட்டுப்படுத்தப்பட்ட தகவல்கள் இணையத்தில் இருந்து பெறப்பட்டன. | பிரகாரம் திட்டத்தின் நிதி நிலை முன்னேற்றம் 17% ஆகும். ஆவணத்தில் திட்டமிடல் பிரிவு எனத் தலைப்பிடப்பட்டுள்ள பகுதி நிதி நிலை முன்னேற்றத்தை ஒப்பிடுவதற்கான தெளிவான இலக்குகளை வழங்கவில்லை. எனவே வருடத்தின் முதல் ஆறு மாதங்களில் ஒதுக்கீட்டின் சுமார் 50% செலவிடப்பட்டிருக்க வேண்டும் என அனுமானிக்கப்படுகிறது. இதனை அடிப்படையாகக் கொண்டால் இந்தத் திட்டம் இலக்கை எட்டவில்லை. மேலும் திருத்தப்பட்ட ஒதுக்கீட்டுத் தொகை ஒட்டுமொத்த வரவு செலவுத்திட்ட வாக்குறுதிக்கா என்பதைத் தகவல்கள் தெளிவாகக் குறிப்பிடவில்லை. எனவே 2021 வரவு செலவுத் திட்ட உரையில் குறிப்பிடப்பட்ட ஆரம்ப ஒதுக்கீடான ரூ.6,000 மில்லியன் | |

| வரவு செலவுத் திட்ட வாக்குறுதி | வெளிப்படைத்தன்மை கண்காணிப்பான் | முன்னேற்றக் கண்காணிப்பான் | ஏஜென்சி |
| --- | --- | --- | --- |
| | | மொத்த வாக்குறுதிக்குமான ஒதுக்கீடாகக் கருதப்படுகிறது. | |
| கிராமிய மருத்துவமனைகளின் அபிவிருத்தி | ஒத்துழைக்கப்படவில்லை | புறக்கணிக்கப்பட்டுள்ளது | சுகாதார அமைச்சு மற்றும் அரச சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு |
| | சுகாதார அமைச்சு மற்றும் அரச சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு ஆகிய இரண்டும் இதற்குப் பொறுப்பானவை என NBD அடையாளம் கண்டது. அரச சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிடம் தாக்கல் செய்யப்பட்ட தகவல் அறியும் உரிமைக் கோரிக்கைக்கு இந்த முன்மொழிவு தங்கள் அமைச்சின் மேற்பார்வையின் கீழ் வரவில்லை என பதிலளிக்கப்பட்டிருந்தது. சுகாதார அமைச்சு தகவல் அறியும் உரிமைக் கோரிக்கை கிடைத்ததை உறுதிப்படுத்தியது. மேலும் | மதிப்பீட்டுக் காலப்பகுதியில் ஒதுக்கீட்டுத் தொகையான ரூ.5,000 மில்லியன் கிடைக்கவில்லை என சுகாதார அமைச்சு பதிலளித்திருந்தது | |

| வரவு செலவுத் திட்ட வாக்குறுதி | வெளிப்படைத்தன்மை கண்காணிப்பான் | முன்னேற்றக் கண்காணிப்பான் | ஏஜென்சி |
|---|---|---|---|
| | மதிப்பீட்டுக் காலப்பகுதியில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை தமக்குக் கிடைக்கவில்லை எனவும் குறிப்பிட்டிருந்தது. தகவல்கள் கிடைக்கப்பெற்றதை உறுதிப்படுத்துவதற்கு அமைச்சுடன் பல்வேறு தடவைகள் தொடர்பை ஏற்படுத்த வேண்டியிருந்தது. முன்மொழிவு தொடர்பான எந்தத் தகவலும் இணையத்தில் கிடைக்கவில்லை. | | |
| கிராமப்புற விளையாட்டு அபிவிருத்தி | ஒத்துழைக்கப்பட்டது | பின்தங்கியுள்ளது | கிராமிய மற்றும் பாடசாலை உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு |
| | அரச சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளுராட்சி அமைச்சு இதற்குப் பொறுப்பானது என NBD அடையாளம் கண்டது. எனவே குறித்த அமைச்சிடம் தகவல் அறியும் உரிமைக் கோரிக்கை ஆரம்பத்தில் தாக்கல் செய்யப்பட்டது. அரச சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளுராட்சி அமைச்சிடம் தாக்கல் செய்யப்பட்ட கோரிக்கைக்குப் பதிலாக, குறித்த முன்மொழிவு தமது அமைச்சின் மேற்பார்வையின் கீழ் வராது எனவும் | " பல்வேறு திட்டங்களுக்காக இராஜாங்க அமைச்சுக்கு ரூ.3,000 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை அந்த அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ள 2021க்கான முன்னேற்ற அறிக்கை காட்டுகிறது. எனினும் 'கிராமிய விளையாட்டு அபிவிருத்தித் திட்டம்' எனத் தலைப்பிட்ட | |

| வரவு செலவுத் திட்ட வாக்குறுதி | வெளிப்படைத்தன்மை கண்காணிப்பான் | முன்னேற்றக் கண்காணிப்பான் | ஏஜென்சி |
|---|---|---|---|
| | இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சில் தாக்கல் செய்யுமாறும் எங்களுக்கு ஆலோசனை வழங்கியது. இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சிடம் தாக்கல் செய்யப்பட்ட கோரிக்கை பின்னர் கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சிடம் மாற்றப்பட்டது. அங்கே முன்மொழிவு தொடர்பான பகுதியளவு தகவல்கள் கிடைக்கப்பெற்றன. அமைச்சின் முன்னேற்ற அறிக்கை மற்றும் இராஜாங்க அமைச்சின் கீழ் வரும் சில திட்டங்களின் முன்னேற்ற அறிக்கை இணையத்தில் முன்கூட்டியே வெளிப்படுத்தப்பட்டிருந்தன. | திட்டம் தொடர்பான தகவல்கள் மட்டுமே தகவல் அறியும் உரிமைக் கோரிக்கைக்கான பதிலில் வழங்கப்பட்டிருந்தது. இது முன்னேற்ற அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள 16 திட்டங்களில் ஒன்றாகும். சில குறிப்பிட்ட உப திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதற்கான சான்றுகளை இணையத்தில் கிடைக்கும் தகவல்களில் இருந்து பெற முடிகிறது. இதன் மூலம் இராஜாங்க அமைச்சு வரவு செலவுத் திட்ட வாக்குறுதியை நடைமுறைப்படுத்த ஆரம்பித்துள்ளது என்பதை அறியலாம். எனினும் அனைத்துத் திட்டங்களுக்குமான இலக்குகள் தெளிவாகக் குறிப்பிடப்படாததால் திட்டமிட்டபடியே முன்னேற்றம் இருக்கிறதா அல்லது திட்டமிட்டதை விட முன்னராக நடைபெறுகிறதா என்பதை மதிப்பிட முடியவில்லை. எனவே முன்னேற்றத்தின் | |

| வரவு செலவுத் திட்ட வாக்குறுதி | வெளிப்படைத்தன்மை கண்காணிப்பான் | முன்னேற்றக் கண்காணிப்பான் | ஏஜென்சி |
|---|---|---|---|
| | | மதிப்பீடு பின்தங்கியுள்ளது என வழங்கப்பட்டுள்ளது." | |
| கிராமிய பாடசாலைகளின் அபிவிருத்தி | வெளிப்படையற்றது | தகவல் வெளிப்படுத்தப்படவில்லை | கல்வி அமைச்சு |
| | அரச சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு மற்றும் கல்வி அமைச்சு ஆகிய இரண்டும் இதற்குப் பொறுப்பானவை என NBD அடையாளம் கண்டது. குறித்த முன்மொழிவு தமது மேற்பார்வையின் கீழ் வராது என அரச சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு எங்களுக்கு அறிவித்தது. தகவல் அறியும் உரிமைக் கோரிக்கையை கல்வி அமைச்சு 9 மாகாணங்களிலும் உள்ள கல்வி அமைச்சுகளுக்கு மாற்றியது. சம்பந்தப்பட்ட அமைச்சுகள் தகவல் அறியும் உரிமைக் கோரிக்கையை அமைச்சுக்களின் கீழுள்ள கல்வித் திணைக்களத்திற்கு மாற்றின. எனினும் எந்தத் தகவல்களும் கிடைக்கவில்லை. முன்மொழிவு தொடர்பான எந்தத் | முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு எந்தத் தகவலும் வழங்கப்படவில்லை அல்லது இணையத்தில் கிடைக்கவில்லை. | |

| வரவு செலவுத் திட்ட வாக்குறுதி | வெளிப்படைத்தன்மை கண்காணிப்பான் | முன்னேற்றக் கண்காணிப்பான் | ஏஜென்சி |
|---|---|---|---|
| | தகவல்களும் இணையத்திலும் கிடைக்கவில்லை. | | |
| கழிவு முகாமைத்துவம் - பிரதேச சபை | வெளிப்படையானது | புறக்கணிக்கப்பட்டுள்ளது | மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி விவகாரங்கள் இராஜாங்க அமைச்சு |
| | இதற்குப் பொறுப்பான அமைப்பாக அரச சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சை NBD அடையாளம் கண்டது. ஆகவே ஆரம்பத்தில் தகவல் அறியும் உரிமைக் கோரிக்கை அரச சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிடம் தாக்கல் செய்யப்பட்டது. அதன் பிறகு அது மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி விவகாரங்கள் இராஜாங்க அமைச்சுக்கு மாற்றப்பட்டது. இராஜாங்க அமைச்சைத் தொடர்புகொண்டு இது தொடர்பில் அறிந்துகொள்வதற்காக எடுக்கப்பட்ட அனைத்து முயற்சிகளும் பலனற்றுப் போயின. எனினும் இராஜாங்க அமைச்சின் கீழுள்ள திட்டங்களின் நிதி நிலை முன்னேற்றம் முன்கூட்டியே இணையத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. " | ஜூன் 30, 2021 அன்று நிதி நிலை முன்னேற்றத்தின் மூலம் இணையத்தில் வெளிப்படுத்தப்பட்ட தகவல்களின் அடிப்படையில் வரவு செலவுத் திட்ட வாக்குறுதிக்காக ரூ.1,600 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது. எனினும் ஒதுக்கீட்டுத்தொகை எதுவும் செலவு செய்யப்படவில்லை. நிதி நிலை தொடர்பில் எந்தவொரு முன்னேற்றமும் இடம்பெறவில்லை என்பதைக் கருத்தில் கொண்டு வாக்குறுதியின் முன்னேற்றம் 'புறக்கணிக்கப்பட்டுள்ளது' என வகைப்படுத்தப்படுகிறது. | |

| வரவு செலவுத் திட்ட வாக்குறுதி | வெளிப்படைத்தன்மை கண்காணிப்பான் | முன்னேற்றக் கண்காணிப்பான் | ஏஜென்சி |
|---|---|---|---|
| | | | |
| உட்கட்டமைப்பு - பிரதேச சபை | வெளிப்படையானது | புறக்கணிக்கப்பட்டுள்ளது | மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி விவகாரங்கள் இராஜாங்க அமைச்சு |
| | "இதற்குப் பொறுப்பான அமைப்பாக அரச சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சை NBD அடையாளம் கண்டது. ஆகவே ஆரம்பத்தில் தகவல் அறியும் உரிமைக் கோரிக்கை அரச சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிடம் தாக்கல் செய்யப்பட்டது. அதன் பிறகு அது மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி விவகாரங்கள் இராஜாங்க அமைச்சுக்கு மாற்றப்பட்டது. இராஜாங்க அமைச்சைத் தொடர்புகொண்டு இது தொடர்பில் அறிந்துகொள்வதற்காக எடுக்கப்பட்ட அனைத்து முயற்சிகளும் பலனற்றுப் போயின. எனினும் இராஜாங்க அமைச்சின் கீழுள்ள திட்டங்களின் நிதி நிலை முன்னேற்றம் முன்கூட்டியே இணையத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. " | ஜுன் 30, 2021 அன்று நிதி நிலை முன்னேற்றத்தின் மூலம் இணையத்தில் வெளிப்படுத்தப்பட்ட தகவல்களின் அடிப்படையில் வரவு செலவுத் திட்ட வாக்குறுதிக்காக ரூ.1,600 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது. எனினும் ஒதுக்கீட்டுத்தொகை எதுவும் செலவு செய்யப்படவில்லை. நிதி நிலை தொடர்பில் எந்தவொரு முன்னேற்றமும் இடம்பெறவில்லை என்பதைக் கருத்தில் கொண்டு வாக்குறுதியின் முன்னேற்றம் 'புறக்கணிக்கப்பட்டுள்ளது' என வகைப்படுத்தப்படுகிறது. | |

| வரவு செலவுத் திட்ட வாக்குறுதி | வெளிப்படைத்தன்மை கண்காணிப்பான் | முன்னேற்றக் கண்காணிப்பான் | ஏஜென்சி |
|---|---|---|---|
| பல்கலைக்கழக உட்கட்டமைப்பு வசதி - நகர பல்கலைக்கழகத்தை ஸ்தாபித்தல் | மட்டுப்படுத்தப்பட்டது | தகவல் வெளிப்படுத்தப்படவில்லை | திறன்கள் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சு |
| | தகவல் அறியும் உரிமைக் கோரிக்கைக்குக் கிடைத்த பதிலில் செயல் திட்டம் எதுவும் இல்லை எனக் குறிப்பிட்டு, திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகள் பட்டியலிட்டிருந்தன. கூடுதலாக நகர பல்கலைக்கழகங்களை ஸ்தாபிப்பதற்கான திட்ட அறிக்கையும் வழங்கப்பட்டிருந்தது. எனினும் குறிப்பிடத்தக்க எந்தவொரு செயற்பாட்டு அல்லது நிதி இலக்குகளோ முன்னேற்றங்களோ வழங்கப்படவில்லை. மேலும் வாக்குறுதிகள் தொடர்பான மட்டுப்படுத்தப்பட்ட தகவல்கள் இணையத்திலிருந்து பெறப்பட்டன. | தகவல் அறியும் உரிமைக் கோரிக்கைக்குக் கிடைத்த பதில் தெளிவற்றதாக இருந்ததுடன் செயற்பாட்டு அல்லது நிதி முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்குப் பயன்படுத்தக்கூடிய வகையில் எந்தவொரு அளவீட்டையும் கொண்டிருக்கவில்லை. எனவே வாக்குறுதி தொடங்கப்பட்டதற்கான தகவல்கள் காணப்படுகின்ற போதும் முன்னேற்றங்களை ஒப்பிடுவதற்கு இலக்குகள் இல்லாமையால் வாக்குறுதியானது 'வெளிப்படுத்தப்படவில்லை' என வகைப்படுத்தப்படுகிறது | |
| யானை - மனித மோதல் | வெளிப்படையற்றது | தகவல் வெளிப்படுத்தப்படவில்லை | வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் |

| வரவு செலவுத் திட்ட வாக்குறுதி | வெளிப்படைத்தன்மை கண்காணிப்பான் | முன்னேற்றக் கண்காணிப்பான் | ஏஜென்சி |
|---|---|---|---|
| | வனவிலங்கு மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சு இதற்குப் பொறுப்பான அமைச்சாக NBD அடையாளம் கண்டது. எனவே ஆரம்பத்தில் குறித்த அமைச்சில் தகவல் அறியும் உரிமைக் கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டது. தகவல் அறியும் உரிமைக் கோரிக்கை பின்னர் வனஜீவராசிகள் பாதுகாப்பு, யானை வேலிகள் மற்றும் அகழிகள் அமைத்தல் உள்ளிட்ட பாதுகாப்பு வேலைத்திட்டங்கள் மற்றும் காடுகளை மீண்டும் வளர்த்தல் மற்றும் வனவளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சிற்கு மாற்றியது. இராஜாங்க அமைச்சு பின்னர் வனஜீவராசிகள் பாதுகாப்பு அமைச்சிற்கு மாற்றியது. திணைக்களத்திடமிருந்து உறுதிப்படுத்தல் கடிதம் கிடைக்கப்பெற்ற போதும் தகவல் எதுவும் கிடைக்கவில்லை. மேலும் வாக்குறுதியின் முன்னேற்றம் தொடர்பான எந்தத் தகவலும் இணையத்திலும் கிடைக்கவில்லை. | முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு எந்தத் தகவலும் வழங்கப்படவில்லை அல்லது இணையத்தில் கிடைக்கவில்லை. | |
| வனப் பாதுகாப்பு | வெளிப்படையற்றது | தகவல் வெளிப்படுத்தப்படவில்லை | வனப் பாதுகாப்பு திணைக்களம் |

| வரவு செலவுத் திட்ட வாக்குறுதி | வெளிப்படைத்தன்மை கண்காணிப்பான் | முன்னேற்றக் கண்காணிப்பான் | ஏஜென்சி |
|---|---|---|---|
| | | | |
| | வனவிலங்கு மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சு இதற்குப் பொறுப்பான அமைச்சாக NBD அடையாளம் கண்டது. எனவே ஆரம்பத்தில் குறித்த அமைச்சில் தகவல் அறியும் உரிமைக் கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டது. அமைச்சு அந்தக் கோரிக்கையை வனப் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு மாற்றியது. திணைக்களத்தில் இருந்து உறுதிப்படுத்தல் கடிதம் கிடைக்கப்பெற்ற போதும் தகவல் எதுவும் கிடைக்கவில்லை. மேலும் வாக்குறுதியின் முன்னேற்றம் தொடர்பான எந்தத் தகவலும் இணையத்திலும் கிடைக்கவில்லை. | முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு எந்தத் தகவலும் வழங்கப்படவில்லை அல்லது இணையத்தில் கிடைக்கவில்லை. | |
| தொலைதூரக் கல்வி | வெளிப்படையற்றது | தகவல் வெளிப்படுத்தப்படவில்லை | கல்வி மறுசீரமைப்பு, திறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் தொலைக்கல்வி ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சு |
| | கல்வி அமைச்சை இதற்குப் பொறுப்பான அமைச்சாக NBD அடையாளம் கண்டது. எனவே ஆரம்பத்தில் குறித்த அமைச்சில் தகவல் அறியும் உரிமைக் கோரிக்கை | முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு எந்தத் தகவலும் வழங்கப்படவில்லை | |

| வரவு செலவுத் திட்ட வாக்குறுதி | வெளிப்படைத்தன்மை கண்காணிப்பான் | முன்னேற்றக் கண்காணிப்பான் | ஏஜென்சி |
|---|---|---|---|
| | தாக்கல் செய்யப்பட்டது. அமைச்சு அந்தக் கோரிக்கையை கல்வி மறுசீரமைப்பு, திறந்த பல்கலைக்கழங்கள் மற்றும் தொலைக்கல்வி ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சிற்கு மாற்றியது. திணைக்களத்தில் இருந்து அடிக்கடி தொடர்பு கொண்டதுடன், உறுதிப்படுத்தல் கடிதமும் கிடைக்கப்பெற்றது. எனினும் தகவல் எதுவும் கிடைக்கவில்லை. மேலும் வாக்குறுதியின் முன்னேற்றம் தொடர்பான எந்தத் தகவலும் இணையத்திலும் கிடைக்கவில்லை. | அல்லது இணையத்தில் கிடைக்கவில்லை. | |
| தொழிற்கல்வி | ஒத்துழைக்கப்படவில்லை | புறக்கணிக்கப்பட்டுள்ளது | திறன்கள் அபிவிருத்தி, தொழிற்கல்வி, |

| வரவு செலவுத் திட்ட வாக்குறுதி | வெளிப்படைத்தன்மை கண்காணிப்பான் | முன்னேற்றக் கண்காணிப்பான் | ஏஜென்சி |
|---|---|---|---|
| | கல்வி அமைச்சு இதற்குப் பொறுப்பான அமைச்சாக NBD அடையாளம் கண்டது. அமைச்சில் தாக்கல் செய்யப்பட்ட தகவல் அறியும் உரிமைக் கோரிக்கை பின்னர் திறன்கள் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சிற்கு மாற்றப்பட்டது. அங்கிருந்து உறுதிப்படுத்தல் கடிதம் கிடைக்கப்பெற்றது. எனினும் தகவல் அலுவலருடன் தொடர்ச்சியாக தொடர்பை ஏற்படுத்திய போதும் தகவல் எதுவும் கிடைக்கவில்லை. எனினும் வாக்குறுதி தொடர்பான மட்டுப்படுத்தப்பட்ட தகவல் ஜனாதிபதி ஊடகப் பிரிவின் இணையத்தளத்தில் காணப்படுகிறது. | ஜனாதிபதியின் ஊடகப் பிரிவில் கிடைக்கும் தகவல்கள் மாணவர் உதவித்தொகைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதை உறுதிப்படுத்துகிறது. எனினும் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக எந்தக் கூடுதல் தகவலும் கிடைக்கவில்லை. அரசுக்குச் சொந்தமான தொழிற்கல்வி நிலையங்களில் தற்போது ஆண்டுக்கு 100,000 மாணவர்கள்அனுமதிக்கப்படும் நிலையில் இது 200,000 ஆக அதிகரிக்கப்படும் என வரவு செலவுத்திட்ட உரையின் முன்மொழிவில் தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும் இந்த கூற்றை ஆதரிக்கும் எந்தப் புள்ளிவிபரங்களையும் பெற முடியவில்லை. | ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சு |
| பெருந்தோட்டம் | மட்டுப்படுத்தப்பட்டது | தகவல் வெளிப்படுத்தப்படவில்லை | பெருந்தோட்ட அமைச்சு, கம்பனி தோட்டங்களை |

| வரவு செலவுத் திட்ட வாக்குறுதி | வெளிப்படைத்தன்மை கண்காணிப்பான் | முன்னேற்றக் கண்காணிப்பான் | ஏஜென்சி |
|---|---|---|---|
